# தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!



## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு! | 01-04-2025 நிகழ்வுகள்

### 1. உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி வழங்குக!

**திமுக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா கோரிக்கை!**



பதினைந்தாவது நிதி ஆணையம் கிராம பஞ்சாயத்துகளுக்கு பரிந்துரைத்துள்ள நிதி விவரங்கள் குறித்து திமுக மக்களவை கொறடாவும் நீலகிரி மக்களவை உறுப்பினருமான ஆ. ராசா நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் தமிழ்நாட்டில் உள்ளூர் சுயாட்சி அமைப்புகளுக்கு (LSGs) வழங்கப்படும் மொத்த நிதி எவ்வளவு?

GST மற்றும் பிற வரிகள் காரணமாக உள்ளூர் அமைப்புகளுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் நிதி அல்லது மானியங்களை வழங்க ஒன்றிய அரசு உருவாக்கியிருக்கும் திட்டங்கள் யாவை? எனவும் அவர் கேட்டுள்ளார்.

### 2. தருமபுரி விவசாயிகளுக்கு ஸ்பைஸ் திட்டத்தில் நிதி!

**தருமபுரி அ.மணி கோரிக்கை!**



புதுமையான முயற்சிகளை ஊக்குவிக்கும் கூட்டு ஏற்றுமதி மேம்பாட்டிற்கான ஸ்பைஸ் திட்டத்தின் (SPICE SCHEME) மூலம் தர்மபுரி விவசாயிகளுக்கு வழங்கப்படும் உதவிகள் குறித்து தருமபுரி திமுக மக்களவை உறுப்பினர் அ. மணி எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

ஸ்பைஸ் திட்டத்தால் இதுவரை பயனடைந்த தமிழ்நாடு விவசாயிகள் மற்றும் விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOகள்) எண்ணிக்கை, பொருட்களின் தரம், உற்பத்தித்திறன் மற்றும் ஏற்றுமதி திறனை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட நடவடிக்கைகள் மற்றும் தமிழ்நாட்டில் ஸ்பைஸ் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்படும் நிதி, தொழில்நுட்பம் அல்லது உள்கட்டமைப்பு வசதிகள் குறித்த விவரங்களையும் தெரிவிக்குமாறு அவர் வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்திடன் கேள்வி எழுப்பியுள்ளார்.

### 3. அமெரிக்க இறக்குமதிக்கு கட்டண குறைப்பு ஏன்? பாதிக்கப்படும் இந்திய உற்பத்தியாளர்கள்

**டாக்டர் கலாநிதி வீராசாமி கேள்வி!**



அமெரிக்காவுடன் நடந்து வரும் இருதரப்பு வர்த்தகப் பேச்சுவார்த்தைகளின் போது ஒன்றிய அரசாங்கம் கட்டணங்களைக் குறைக்க ஒப்புக்கொண்டுள்ளது குறித்து நாடாளுமன்றத்தில் வட சென்னை திமுக மக்களவை உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி ஒன்றிய வணிக மற்றும் தொழில்துறை அமைச்சகத்திடம் கேட்டுள்ளார்.

இவ்வாறு கட்டணங்களை குறைப்பதன்மூலம் பல துறைகளில் உள்நாட்டு தொழில்கள் பாதிக்கப்படுவதுடன், வேலை இழப்புகளுக்கும் வழி வகுக்கும் என சுட்டிக்காட்டிய அவர், இழப்புகளை தடுக்க அரசாங்கத்திடம் உள்ள திட்டங்கள் என்ன என்றும் உள்ளூர் உற்பத்தித் துறையில் இத்தகைய கட்டணக் குறைப்புகளின் நீண்டகால பாதிப்பு குறித்து இந்தியத் தொழில்துறை பிரதிநிதிகளிடம் அரசு பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறதா? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

### 4. விவசாய உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க நடவடிக்கை என்ன?

**எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!**



பத்தாயிரம் விவசாய உற்பத்தியாளர் அமைப்புகளை உருவாக்குதல் மற்றும் ஊக்குவித்தல் எனும் கொள்கையுடன் ஏற்படுத்தப்பட்ட ஒன்றிய அரசின் விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs) திட்டம் குறித்து நாடாளுமன்றத்தில் அரக்கோணம் திமுக எம்.பி, ஜெகத்ரட்சகன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை உருவாக்கப்பட்ட அமைப்புகள் எத்தனை மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்த விளக்கங்கள்,

விலை அறிதல், மற்றும் உள்ளீட்டு சேமிப்பு, சந்தை பற்றிய விழிப்புணர்வு, வருமானம் ஆகியவை குறித்து முறையான தகவல்களுடன் சிறு மற்றும் குறு விவசாயிகள் அறிந்துகொள்ள இந்த அமைப்புகள் உதவியாக இருக்கின்றவா?

சந்தைப் போட்டி, உள்கட்டமைப்பு மற்றும் நிதிக் கட்டுப்பாடுகள் அடிப்படையில் விவசாய உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

உணவு பதப்படுத்தும் விநியோகச் சங்கிலிகளில் சிறு விவசாயிகளை ஒருங்கிணைப்பது மற்றும் அவர்களின் பங்களிப்பை அதிகரிக்க செய்யவும் FPOக்களை ஊக்குவிக்கவும் அமைச்சகம் எடுத்த நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் தனது கேள்வியில் விரிவாக குறிப்பிட்டுள்ளார்.

### 5. பெண்களுக்கு பிரசவத்திற்குப் பிந்தைய மனநலப் பிரச்சினைகள் நடவடிக்கை எடுப்பீர்!

**திருச்சி சிவா!**



பெண்களிடையே பிரசவத்திற்குப் பிந்தைய மனநலப் பிரச்சினைகள் அதிகரித்திருப்பது குறித்து கவலை தெரிவித்துள்ள திமுக மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி. சிவா, அதற்காக ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை குறித்தும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுபோன்ற ஒரு பிரச்சினை பெண்களுக்கு ஏற்படுவது குறித்து ஒன்றிய அரசு பெண்கள் நலனில் அக்கறையுடன் ஏதேனும் கணக்கெடுப்பு நடத்தியுள்ளதா என்றும் பிரச்சினைகளை கண்டறிவதுடன் அவற்றுக்கான தீர்வை வழங்குவதில் துணை செவிலியர்களின் செயல்பாடுகள் எந்த அளவிற்கு உறுதுணையாக இருக்கின்றது எனவும் கேட்டுள்ளார்.

இப்பிரச்சினையில் தீவிரத்தை கருத்தில்கொண்டு உடனடியாக பெண்களின் பிரசவத்திற்குப் பிந்தைய மனநலத்தை மையமாகக் கருதும் திட்டங்களை அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### 6. போலி கைத்தறி உற்பத்தியை தடுத்திடுக!

**கோவை – கணபதி ராஜ்குமார் கோரிக்கை!**



இந்தியாவில் உற்பத்தியாகும் அசல் கைத்தறி பொருட்களை பாதுகாப்பிற்காக ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்றத்தில் கோவை மக்களைவை திமுக உறுப்பினர் கணபதி ராஜ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

பல கைத்தறிப் பொருட்கள் இயந்திரத்தின் கீழ் நெய்யப்பட்டு நாட்டில் கையால் தயாரித்த பொருட்களாக விற்கப்படுகின்றன என்பதை குறிப்பிட்டு அதை தடுக்க வேண்டும் என்றும் போலி கைத்தறிப் பொருட்களை கண்டறியும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கை வேண்டும் எனவும் அவர் கோரிக்கை வைத்துள்ளார்.



தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணத்தில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தி.மு.க மருத்துவர் அணி சார்பில் மாபெரும் மருத்துவ முகாம் மற்றும் கண் பரிசோதனை முகாமை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி ஆகியோர் தொடங்கி வைத்தனர். இதில் சாக்கோட்டை க. அன்பழகன் எம்.எல்.ஏ, முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் மரு.அஞ்சுகம் பூபதி மற்றும் கழக நிர்வாகிகள், மருத்துவர் அணியினர் கலந்து கொண்டனர்.

## மும்பை மாநகர் மாநிலக் கழக

# பொறுப்புக்குழுத் தலைவர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

மும்பை மாநகர் மாநிலக் கழகப் பொறுப்பாளராக பொறுப்பு வகித்து வந்த திரு. கருவூர் இரா.பழனிச்சாமி அவர்கள், தனது உடல்நலம் கருதி, தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விலகிக் கொண்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற மும்பை மாநகர் மாநிலக் கழகப் பொறுப்புக்குழு தலைவர் மற்றும் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**பொறுப்புக்குழு தலைவர் : ம.சேசுராசு,** உதயசூரியன் இல்லம், 354, கல்யாண் பவன், கல்பதேவி சாலை, மும்பை - 400 002.

**பொறுப்புக்குழு உறுப்பினர்கள் :** 1. வே.ம. உத்தமன், மும்பை.
2. க.மு.மாணிக்கம், ஆர்.ஜி.மார்க், சிஎச்எஸ், செம்பூர், மும்பை-74
3. ம. நீதிதுரை, ரயில்வே காலனி, அன்டோபில் வாடாலா, மும்பை-37
4. அன்பழகன் பொற்கோ, ஜான்பாப்டிஸ்ட் ரோடு, பந்தாரா மேற்கு.
5. மாறன் ஆரியசங்காரன், டாக்டர் பாலிகாநகர், மாஹிம் கிழக்கு.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 01.04.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## பெரம்பலூர் மாவட்ட இளைஞர் அணி சார்பில்,

# முதல்வர் பிறந்த நாள் விழா கருத்தரங்கம்!

## பேராசிரியர் சுப.வீரபாண்டியன் சிறப்புரை! மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

*பெரம்பலூர், ஏப். 3-*

பெரம்பலூர் மாவட்ட இளைஞர் அணி சார்பில், கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழா கருத்தரங்கம் நடைபெறுகிறது. இந்த கருத்தரங்கில் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப.வீரபாண்டியன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.



இது குறித்து பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் துணைப் பொதுச் செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா. எம்.பி., உத்தரவிற்கிணங்க, போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கிணங்க, கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்ட இளைஞர் அணி சார்பில், 05.04.2025 (சனிக்கிழமை), காலை 10.00 மணியளவில் பெரம்பலூர், எளம்பலூர் சாலையில் உள்ள கர்ணம் சுப்ரமணியம் சகுந்தலா திருமண மண்டபத்தில் கருத்தரங்கம் நடைபெறுகிறது. மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன் (எ) ஹரி பாஸ்கர் தலைமையில், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் அ. அப்துல்கரீம் வரவேற்புரையில்,

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், கே.என்.அருண்நேரு.எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ. கே.அருண், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.ஆர். சிவசங்கர், வ.சுப்ரமணியன், மா.பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் கருத்தரங்கை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைக்கிறார்.

இந்த கருத்தரங்கில் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப.வீரபாண்டியன் கலந்து கொண்டு சிறப்புறையாற்றுகிறார்.

இதில் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை பொதுச்செயலாளர் சிற்பி. செல்வராஜ் கொள்கையின் தொடர்ச்சி எனும் தலைப்பிலும், திராவிடர் கழக துணைப் பொதுச்செயலாளர் வழக்கறிஞர் மதிவதனி நவீனத்துவத்தின் மலர்ச்சி எனும் தலைப்பிலும், தி.மு.க.தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் எஸ். பத்மபிரியா திட்டங்களின் வளர்ச்சி எனும் தலைப்பிலும் உரையாற்றுகின்றனர். மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் இரா.அருண் நன்றியுரையாற்றுகிறார். இதில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதி நிதிகள் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்று பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

## சேலம் மத்திய மாவட்டம்

# சேலம் மாநகரம்,

# 3வது மற்றும் 46வது வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

சேலம் மத்திய மாவட்டம், சேலம் மாநகரம், அழகாபுரம் பகுதி, 3வது வட்டக் கழகச் செயலாளர் என்.கே.பழனிசாமி அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **டி.ராஜன்,** (மாரியம்மன் கோவில் தெரு, நரசோதிப்பட்டி, சேலம்-636004) அவர்கள் 3வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;

குகை பகுதி, 46வது வட்டக் கழகச் செயலாளர் ஆர். விஜயகணேஷ் அவர்கள் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, அவருக்குப் பதிலாக **வி.குமார்,** (16/2, வெங்கட்ராமன் தெரு, குகை, சேலம் - 636 006) அவர்கள் 46வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 01.04.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. ஒன்றிய, நகர, பேரூர் கழக பொறியாளர் அணி பொறுப்புகளுக்கு நேர்காணல் மயிலாடுதுறை மாவட்ட கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் முன்னிலையில் பொறியாளர் அணி மாநில தலைவர் துரை. கி.சரவணன் மாநில துணை செயலாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் நேர்காணல் செய்தனர், உடன் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் காழி.கலைவாணன், மாவட்ட பொறியாளர் அணி துணை தலைவர் கார்த்திகேயன், மாவட்ட துணை செயலாளர் செல்வமணி, மாநில விவசாய அணி இணை செயலாளர் ஆர்.அருட்செல்வன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், நகர மன்ற தலைவரும் நகர கழக செயலாளர் என்.செல்வராஜ் தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, ஒன்றிய செயலாளர்கள் ஞான.இமயநாதன், பி.முருகமணி, அப்துல் மாலிக் ஏ.ஆர்.ராஜா மங்கை அம் சங்கர், பொதுக்குழு உறுப்பினர் பி..சிவதாஸ், நத்தம் வின்செண்ட் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் இளைஞர் அணி சார்பில்

# ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் கே.கே.செல்லப்பாண்டியன் - நா.இளையராஜா - வே.மதிமாறன் - பேனா தெய்வம் சிறப்புரை!

*புதுக்கோட்டை, ஏப்.3-*

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி தி.மு.க. இளைஞர் அணி சார்பில் இந்தி திணிப்பு, நிதிப் பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசீரமைப்பில் அநீதி செய்யும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (3.04.2025 - வியாழக்கிழமை) மாலை 6 மணியளவில் பெருங்களூரில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சு.சண்முகம் தலைமையிலும், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் முத்துசாமி இளஞ்சேரன் வரவேற்புரையிலும் நடைபெறுகிறது.

திராவிட இயக்க எழுத்தாளர் வே.மதிமாறன், தலைமை கழக இளம் பேச்சாளர் பேனா தெய்வம், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் நா.இளையராஜா ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர். மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், நகர இளைஞர் அணி அமைப்பாளர் மு. கலைஞர் கருணாநிதி, ப.சிவா (எ) சிவக்குமார், நா.அன்சாரி பாசித், செ.கணேஷ், ஒன்றிய, நகர செயலாளர்கள் ஆர்.ஆர். சாமிநாதன், மு.க.இராமகிருஷ்ணன், தவ.பாஞ்சாலன், வே.ராஜேஷ், வண்ணை அரங்கநாதன், செ.அசோக் பாண்டியன், வி.என்.மணி, வைகோ.ராஜன், மு.கலியமூர்த்தி, எம்.எம்.பாலு, வி.என்.எம்.பாலு, வி.ஜி. ஆர்.மணிவண்ணன், ஆர். ரவிச்சந்திரன், சி.மணிகண்டன், எஸ்.ராஜலிங்கம். முத்தமிழ்ச்செல்வி சரவணன், ஆர்.மணிமாறன், எம்.முனியாண்டி, பொன். செல்வராஜ், எம்.இளங்கோவன், ஒன்றிய, நகர, இளைஞர்அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ரா.கரிகாலன், த.சத்தியமூர்த்தி, அ.இளையராஜா, ச.மணிராஜ், சா.கார்த்திக், மா.மகேந்திரன், ஆர்.ஹரிஹரன், ரா.ஆசைதம்பி, கே.என்.ஞானவேல், சி.ஜெரால்டு நிக்கேஸ். ரா.மணிகண்டன், ரா.தர்மராஜ். அ.பிரான்சிஸ் திரவியராஜா, பாண்டி, ரா.அபினேஷ், கோ.முருகேசன். அமுல்ராஜ், உருமராஜ், சதீஷ், பிரகாஷ், கவிதாஸ். ராஜேஷ்குமார், சதீஷ்குமார், மத்தியாஸ், பாண்டி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எம்.எம்.அப்துல்லா எம்.பி. டாக்டர் வை. முத்துராஜா எம்.எல்.ஏ., பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், திலகவதி செந்தில், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், த.சந்திரசேகரன், பி.டி.அரசக்குமார், அரு. வீரமணி, புதுக்கோட்டை விஜயா, சுப. சரவணன். டாக்டர் எஸ்.ஆர். அண்ணாமலை, கே.ஆர்.என். போஸ், எஸ்.எஸ்.கருப்பையா, க. மதியழகன், பெ. ராஜேஸ்வரி, எம்.லியாகத் அலி, கீரை.தமிழ்ராஜா, கே.எஸ். சந்திரன், எம்.பரமசிவம், என்.சேட்டு, வெ.முத்துகிருஷ்ணன், மு.பி.ம.சத்தியசீலன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, மா.தமிழ் அய்யா, ஓ.எஸ்.வெங்கடாஜலம், அ.இளங்குமரன், சி.சண்முகம், கே.பி.அய்யப்பன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் தென்னலூர் எம்.பழனியப்பன், என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், செந்தில்குமார், ஆர்.செல்லத்துரை சி.ஆர்.வி.சித்ரா, பேரூர் கழக செயலாளர்கள் வை. விஜயக்குமார், உ.முருகேசன், பி.அண்ணாத்துரை, எம்.எஸ்.ஏ.முகமது ரிஷா, கழக முன்னோடிகள் க. ரெங்கராஜ், மு.பி.மணி, திருஞானசம்பத்தம் க.நைனா முகம்மது, ஆர். பாலகிருஷ்ணன், ராம. செல்வராஜ், ஜெகந்நாதன இராய.முத்துக்குமார், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் உரக்கடை எம். கருப்பையா, முனைவர் சி. குறிஞ்சி வாணன், மஜித் முபாரக், கே. எஸ்.ச.இளையக் சூரியன், புத்தாம்பூர் எம்.சுப்பையா, டாக்டர்மு.க.முத்துக்கருப்பன், செந்தாமரை பாலு, டி.எம். ஆர்.ராமமூர்த்தி, வழக்கறிஞர் ஏ.வீரய்யா, பொன். பாரிவள்ளல், டி. சூசைராஜ், க.கவிவேந்தன், வி. அரங்கநாயகம், எஸ். வி.ஆர்.ஜெஸ் ஸ்டாலின், ஆர்.டி.ஆர்.ராமசாமி, எம். ராஜா, கா.இளவரசன், அ.பிரபா, தவசுமணி, கே.கணபதி, எம்.வேலுச்சாமி, இ.பி.சண்முகம், பூங்குடி எம்.சிவா, சரண்யா ஜெய்சங்கர், முத்துலெட்சுமி சாமி அய்யா மற்றும் மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் , வட்ட , கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், மாவட்ட அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர் . முடிவில் புதுக்கோட்டை ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் செ.சுதாகர், கரம்பக்குடி தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் என்.எம் ஐயப்பன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் மத்திகிரியில் இளைஞர் அணி சார்பில் இந்தித் திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறு சீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., ஊடகவியலாளர் செந்தில்வேல் சிறப்புரை ஆற்றினர். உடன் மேயர் சத்யா, அவைத் தலைவர் யுவராஜ், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் சீனிவாசன், பொருளாளர் சுகுமாரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சுமன் உள்ளிட்டார் இருந்தனர்.